OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11407

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.08.2025

Accepted: 20.09.2026

Published: 01.10.2026

Citation:
Murugesapandian, N. "Kōnangki's Words Floating in a Mental Space Where Land and Time Are Blurred." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 1–13.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11407

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

Kōnangki's Words Floating in a Mental Space Where Land and Time are Blurred

N. Murugesapandian
http://orcid.org/0000-0002-1831-7730

Abstract

It is necessary to initiate a discourse centered on the question of how to characterize the words of Konangi, a storyteller who holds a distinctive identity in the world of Tamil short fiction. The words welling up within Konangi in the realm of memory emerge, transforming at one level into stories and at another into fictions. Konangi's world of stories expanding infinitely through words steeped in darkness and absurdity is, in a sense, an expression of a deranged state of mind. In Konangi's creative work, language holds the primary position, while fiction embedded within the words occupies the secondary place. There is no one in Tamil to match Konangi, who has cast aside definitions constructed by words to forge a new narrative for himself and who, at a certain stage, even repudiates his own writing to reinvent the art of fiction.

Keywords: *Tamil Short Story, Konangi, Criticism, Language of Fiction.*

References

1. Konangi. Saloon narkaliyil sulandarapadai. Pudhanatham: Adayalam Publications, 2015.

நிலமும் காலமும் மயங்கிய மனவெளியில் மிதக்கின்ற கோணங்கியின் சொற்கள்

ந. முருகேசபாண்டியன்

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்ச் சிறுகதை உலகில் தனக்கெனத் தனித்த அடையாளத்துடன் விளங்குகின்ற கதைசொல்லியான கோணங்கியின் சொற்களை எப்படி அடையாளப்படுத்துவது என்ற கேள்வியை முன்வைத்துப் பேச்சுகளை உருவாக்கிட வேண்டியுள்ளது. நினைவுப்புலத்தில் கோணங்கிக்குள் பொங்குகின்ற சொற்கள், ஓருநிலையில் கதைகளாகவும் இன்னொரு நிலையில் புனைவுகளாகவும் உருமாறி வெளிப்படுகின்றன. இருண்மையும் அபத்தமும் தோய்ந்த சொற்களினால் முடிவிலியாக விரிந்திடும் கோணங்கியின் கதையுலகு, ஒருவகையில் பித்து மனநிலையின் வெளிப்பாடுதான். கோணங்கியின் படைப்பாக்கத்தில் மொழி முதன்மையாகவும் புனைகதை சொற்களுக்குள் புதைந்து இரண்டாமிடமும் பெறுகின்றன. இதுவரை சொற்களினால் கட்டமைக்கப்பட்ட வரையறைகளைப் புறந்தள்ளிவிட்டுத் தனக்கெனப் புதிய கதையாடலை உருவாக்கி, ஒருநிலையில் தன்னுடைய எழுத்தையே மறுதலித்துப் புதிதாகப் புனைகின்ற கோணங்கிக்கு நிகராகச் சொல்லிட தமிழில் யாருமில்லை.

முக்கியச் சொற்கள்: *தமிழ்ச் சிறுகதை, கோணங்கி, திறனாய்வு, புனைவு மொழி.*

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே
(தொல்காப்பியம், சொல்லதிகாரம், நூற்பா.157)

இளங்கோ என்ற பெயருடன் 1981 ஆம் ஆண்டு எங்கள் ஊருக்கு என்னைத் தேடி வந்தவர், சில ஆண்டுகளில் கோணங்கி என்ற பெயருக்கு மாறியதற்குப் பின்னர் ஏதாவது மர்மம் பொதிந்திருக்கிறதா? யோசிக்கும் வேளையில் நினைவுகள் சலித்தெடுக்கிற சொற்களில்தான் பூமியில் மனித இருப்பு இருக்கிறது. ஆதியில் வார்த்தையாக இருந்த தேவன் (யோவான் நற்செய்தி. 1:1) என்ற பைபிள் வாசகத்தில் இடம் பெற்றுள்ள வார்த்தை, மொழியில் பொருளைக் குறிக்கின்ற ஒலிகளின் தொகுப்பான சொல்லைக் குறிக்கிறது. கடவுள் என்பது சொல்லில் தான் உருவாகிறது. ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்ற சொல்லாடல் நிலவுகிற தமிழ் நிலவெளியில் சொற்கள் கட்டமைக்கின்ற யதார்த்தத்தை மெய்யானது என்று நம்புகிற மனம், ஒருவகையில் புதிரானது. அறுபதுகள் காலகட்டத்தில் எங்கள் கிராமத்துப் பெண்களைப் பிடித்துக்கொண்டு பாடாய்ப்படுத்திய வெள்ளையம்மாள், வெள்ளைச்சாமி என்ற பேய்கள் சொற்கள்மூலம்தான் வாழ்ந்து கொண்டிருந்தன. அவை, எண்பதுகளில் காணாமல் போய்விட்டன. நாற்பதுகளில் வழிப்பறி செய்த அண்ணனும் தம்பியும் கொலை வழக்கில் சிக்கி, இருவருக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனைக்குப் பின்னர், இருவரின் பிணங்களும் எங்கள் கிராமத்திற்குக் கொண்டுவரப்பட்டுச் சாத்தி வைக்கப்பட்டிருந்த மங்கம்மா காலத்துப் புளிய மரம் பூ மாலை, சந்தனம், குங்குமம், ஊதுபத்திப் புகையுடன் எழுபதுகளின் இறுதியிலும்கூட பலரையும் பயமுறுத்திக் கொண்டிருந்தது. இரவுவேளையில் மங்கலான நிலவொளியில் தாழ்ந்து உயர்ந்திடும் புளிய மரக்கிளைகள் பேயாக உருமாறி, வழிப்போக்கர்களிடம் பீதியைக்

கிளப்பின. கிராமத்தினரின் சொற்களால் கொடூரமாகக் காட்சியளித்த புளிய மரம், கோடையில் வீசிய சூறாவளிக் காற்றில் பரிதாபகரமாகச் சாய்ந்தபோது, பேய்கள் காற்றில் கரைந்து போயின; ஊராரின் நினைவில் இருந்து மறைந்தன. பொதுவாகச் சொற்களால் உருவாக்கப்படும் உலகில் நடந்து முடிந்த சம்பவங்கள் எல்லாம் கதைகளாகி வெளியெங்கும் மிதக்கின்றன. நடப்பியலாகச் சொல்லப்படுகிற கதைகள் ஒருபுறமும் சொற்களின் அதிகபட்சமான சாத்தியங்களுடன் மாய உலகிற்கு இட்டுச் செல்கின்ற கதைகள் இன்னொருபுறமும் என்று உலகமே கதைகளால் நிரம்பியுள்ளது. தமிழ்ச்சிறுகதை உலகில் தனக்கெனத்தனித்த அடையாளத்துடன் விளங்குகின்ற கதை சொல்லியான கோணங்கியின் சொற்களை எப்படி அடையாளப்படுத்துவது என்ற கேள்வியை முன்வைத்துப் பேச்சுகளை உருவாக்கிட வேண்டியுள்ளது. நினைவுப் புலத்தில் கோணங்கிக்குள் பொங்குகின்ற சொற்கள், ஒருநிலையில் கதைகளாகவும் இன்னொரு நிலையில் புனைவுகளாகவும் உருமாறி வெளிப்படுகின்றன. இருண்மையும் அபத்தமும் தோய்ந்த சொற்களினால் முடிவிலியாக விரிந்திடும் கோணங்கியின் கதையுலகு, ஒருவகையில் பித்து மனநிலையின் வெளிப்பாடுதான். ‘பித்தா பிறைசூடி’ என்று இறைவனைச் சுந்தரர் விளிப்பதில் உலக வழக்குக்கு அப்பாற்பட்ட உன்னத இயல்புடையவரைப் பித்தர் என்று குறிப்பது புலனாகிறது. கோணங்கியைப் பித்தா என்றும் எழுத்துச் சித்தர் என்றும் சொல்லத் தோன்றுகின்றது. சரி, இருக்கட்டும்.

நினைவிலி மனநிலையுடன் கோணங்கி எழுதியுள்ள சில சிறுகதைகளும் நாவல்களும் வாசிப்பதற்குச் சிரமமாக இருக்கின்றன? அவற்றை எப்படிப் பொருள் கொள்வது? அவருடைய புனைவுமொழி பளிங்குப் பெட்டகமாக மாறியவேளையில் பெட்டகத்தைத் திறப்பதற்கான கடவுச்சொல் என்ன? இப்படியான கேள்விகளைக் கடந்த முப்பதாண்டுகளாக எதிர்கொண்டபோது, கோணங்கியின் புனைவுமொழி பற்றி விரிவாக எழுதிட நினைத்தது இப்பொழுது தான் சாத்தியமாகியுள்ளது. கோணங்கியின் புனைவெழுத்துகள் பற்றிய என் அபிப்ராயம் அல்லது திறனாய்வுகூட கோணங்கியின் சாயலில் இருந்தால், கும்பெனி பொறுப்பாகாது சகாக்களே! மொழியைத் திருகிக் கதைத்த மௌனி, லா.ச.ராமாமிர்தம் போன்றவர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டுத் தனக்கெனப் புதிய தடத்தை உருவாக்கியுள்ள கோணங்கியின் எழுத்துகளை வாசிக்க விரும்புகிறவர்கள் தான்யாவுடன் சிநேகிதமாகி, ஸ்டெப்பிப் புல்வெளியில் ஊடறுத்துச் செல்கின்ற புகைவண்டியில் ஜன்னலோரம் பயணிக்க வேண்டும். அஸ்டோபானியா ரயில் நிலையத்தில் நிமோனியாக் காய்ச்சலினால் மரித்து, விரைந்திருந்த லேவ் தோல்ஸ்தாயின் உடலுக்குப் பின்னர் பொதிந்திருக்கிற கதைகளை அறிந்திட சைபீரியாக் காடுகளுக்குள் வழி மறந்து பிராந்தனாக அலைந்து திரிய வேண்டும். நிகண்டுகள் தொடங்கி உலகின் உன்னதமான இலக்கியப் பிரதிகளுக்குள் பயணித்து அதியற்புதப் புனைவுகளுக்குள் மூழ்கி, சொற்களைத் தேடி மதுரை, டவுண்ஹால் ரோட்டில் நாடகக்காரியுடன் அலைந்து திரிகின்ற மதுரகவி பாஸ்கரதாஸின் பேரனான கோணங்கியின் பூர்வீக வாசம், கண்டமனூருக்கு அப்புறம் மதுரை, தலைவிரிச்சான் சந்துதான். இப்படியான கோணங்கி தொடர்ந்து எழுதியுள்ள புனைகதைகளைப் பற்றிய காத்திரமான தேடல் தொடர்ந்திட வெறுமனே வாசித்தல் மட்டும் போதாது!

கோணங்கியும் அவருடைய புனைவுகளும் வேறுவேறு அல்ல. கடந்த 2026, மே மாதம் ஒன்றாம் தேதி அன்று கேரளாவில் வனத்திற்குள்ளே இருக்கிற மங்கலாதேவி கோவிலுக்குக் கோணங்கி, சரவணன்,

சத்தியப்பெருமாள் உடன் போயிருந்தேன். கண்ணகி சிலைக்கு முன்னர் சிதலமான கோவில் இடிபாடுகளின்மீது கோணங்கி அண்மையில் எழுதிய ஹா-ரி-தி நீ-லி-தா (இரட்டைப் புதினம்) நாவலை வைத்துச் சந்நதம் வந்ததுபோல சில நிமிடங்கள் மௌனமாக நின்றார். காலை வெய்யிலில் அடர்ந்த காடு வேறு ஒன்றாக உருமாறியிருந்த சூழலில் கண்ணகியின் அவலக் குரல் வெளியெங்கும் ஒலித்தது. பின்னர் அவர், மாப்பிள்ளை உனக்குத்தான் என்று சொல்லியவாறு அந்த நாவலை என்னிடம் தந்தபோது அவருடைய உடல்மொழியும் முகமும் மாறியிருந்தன. வறட்டு நாத்திகனான நான் அந்தப் புத்தகத்தைப் பெற்றபோது கண்ணகி பற்றிய பிம்பம் எனக்குள் தோன்றியது. கோணங்கியின் புனைவு மொழிகளை நேர்ப் பேச்சிலும் எழுத்திலும் வேறுபாடு இல்லாமல் இருப்பதைத் தொடர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கிற எனக்கு அவருடைய செயல்பாடு வழமையானது தான். நீங்கள் அந்த இடத்தில் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?

பேச்சு மொழியின் அடிப்படை அலகான ஒலி வடிவிலான எழுத்துகளின் கோர்வையினால் உருவான சொற்கள்தான் அன்றாட வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றன. கோணங்கி சொற்களின் பின்னர் இடைவிடாமல் பயணித்துக் கண்டறிந்த இருப்பினைக் கதைகளாக்கி, வாசிப்பின் வழியாக வாழ்க்கையை அறிமுகப்படுத்துகிறார். கோணங்கியின் மொழி, வழக்கமாக நடப்பியல் ரீதியிலான கதைசொல்லல்மூலம் கதை வாசிப்பினுக்குப் பழக்கப்பட்டவர்களுக்குப் புதிராக இருக்கிறது. நாம் வாழ்கின்ற வாழ்க்கை துல்லியமானது என்று பலரும் நம்புகிறோம். ஆனால் ஒவ்வொரு நாளும் உறங்கும்போது "நான்" காணாமல் போகிறது. அப்பொழுது எங்கே இருக்கிறோம்? தூங்குவதுபோலச் சாக்காடு என்ற வள்ளுவரின் வரி, எல்லாம் தெளிவாகவும் புரிதலாகவும் இருக்கின்றன என்ற மானுட நம்பிக்கையைச் சிதலமாக்குகிறது. கோணங்கியின் படைப்பு மொழிக்குள் பயணிப்பது சவாலாக இருந்தாலும் அவர் சித்திரிக்கிற உலகை வசப்படுத்திட தொடர்ந்து முயற்சிக்க வேண்டியுள்ளது. வேறு வழியில்லை.

'சலூான் நாற்காலியில் சுழன்றபடி' என்ற தலைப்பில் வெளியான கோணங்கியின் முதல் எழுபது கதைகள் அடங்கிய தொகுப்பிலுள்ள கதைகளை வாசிக்கும் போது ஒவ்வொரு காலகட்டத்திலும் கோணங்கி கண்டறிந்த மொழியின் விகாசத்தைப் புரிந்திட முடியும். கரிசல் பூமியின் வெக்கையில் தகிக்கின்ற கிராமத்தில் இருந்து தொடங்கிய கோணங்கியின் புனைவுப் பயணம் உலகமெங்கிலும் நகரத்து வெளிகளில் கட்டற்று விரிந்துள்ளது. அதே வேளையில் கட்டுக்கதைகள், தொன்மக் கதைகள், அதியற்புதப் புனைகதைகள், நாட்டார் வழக்காறுகள், தொல் பழங்குடி மரபுகள், வைதிக புராணக் கதைகள் என்று விரிந்திடும் அத்துவான வெளியில் கோணங்கியின் கொண்டாட்டங்கள் முடிவற்று நீள்கின்றன. ஒரு கணம் என்று நினைவில் காட்சிப் படுத்தப்படுகின்ற கணத்தையும் விடியல் பொழுதில் மிச்சமான இருட்டைப் பிடித்து அடைத்து வைத்திருக்கின்ற குடுவையும் அசலானவை என்ற நம்புகின்ற போது, மறதி என்ற சொல் ஒவ்வொருவருக்குள்ளும் கிளர்த்துகின்ற உணர்வுகள் அபாரமானவை. நினைவுப் புலத்தில் பதிவாகின்ற ஒவ்வொரு சொல்லும் தானாகவே காற்றில் கரைந்திடும் சூழலில் நம்மால் என்ன செய்யவியலும்?

ஒவ்வொரு படைப்பாளரும் மொழியுடன் மல்லுக்கட்டிப் படைப்புகளைப் படைத்திடுவது ஒருவகையில் சவால்தான். புனைவெழுத்து, செறிந்த நிலையில் கவித்வத்துடன் செழுமையாகக் கதையாடலில் வெளிப்படும் போது வழமையான வாசகப் பரப்பு, சுருங்கிட வாய்ப்புண்டு. கோணங்கிக்குள்ளாகச்

சுற்றிச் சுழலும் கவித்துவ ஊற்று, புனைவையும் கவிதை வரிகளாக மாற்றுகின்றது. தெருவோரத்தில் பூத்திருக்கிற நெருஞ்சிப் பூக்களின் வண்ணத்தை ரசிக்கின்ற மனமுடைய கோணங்கி அழகியல் சார்ந்த மொழியில் விவரித்திடும் விவரணைகள், இதுவரை தமிழ்ப் புனைகதை நிலவிடும் எழுத்து மரபைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. கோணங்கியின் புனைகதையின் கவிதை மொழிக்குள் பயணித்திட கூடுதல் முயற்சி தேவைப்படுகிறது. கவிதை, உரைநடை என்ற பேதமில்லாமல் படைப்பை வாசிக்கின்ற மனநிலை தேவைப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையிலும் உரை நடையை எழுதுவதற்கு அறியாத பண்டிதர்கள் மருத்துவம், சமையல் உள்ளிட்ட பல்துறை நூல்களைத் தமிழில் செய்யுள் வடிவில்தான் எழுதினர். அந்தவகையில் கோணங்கி உரைநடையில் கவிதை மொழியைக் கையாண்டு எழுதுகிற புனைவெழுத்து வாசிப்பில் புரியவில்லை என்ற கூற்று, வாசகர்களைக் குள்ளர்களாக்கிடும் தந்திரவயப்பட்டது. இரு உள்ளங்கைகளையும் பரபரவெனத் தேய்த்து, சத்தத்துடன் தட்டிப் பேசுகின்ற மாந்திரிகனா எழுத்தாளன்? ஜெர்மனியின் புகழ்பெற்ற 'தி பைட் பைப்பர் ஆப் ஹெமலின்' என்ற பிரபலமான நாட்டார் கதையில் புல்லாங்குழலூதியின் புல்லாங்குழல் இசையில் மயங்கிப் பின்தொடர்ந்து செல்கின்ற குழந்தைகள் போல மரபான கதைசொல்லிகளின் பின்னர் ஈரம் கசிந்த விழிகளுடன் செல்கின்ற வாசகர்களைத் தடுத்து நிறுத்தி, படைப்பின் மூலம் வாசகர்களிடம் கேள்விகளை எழுப்பியதில் கோணங்கியின் எழுத்து, தனித்து விளங்குகிறது. கோணங்கி தன்னுடைய படைப்புகளில் மொழியா? கதையா? என்ற கேள்வியினூடாகக் கதை சொல்லலைவிடப் புனைவுகளை முன்னிலைப்படுத்தி அதியற்புதம் ததும்பிடும் விநோத உலகினைச் சித்திரிக்க முயலுகிறார். கதையைச் சொல்ல கோணங்கி எதிர்கொண்ட சிரமங்களை வாசிப்பில் வாசகர்களும் அடைந்திடும்போதுதான் பிரதிக்குள் பொதிந்திருக்கிற கதை அல்லது புனைவை அடையாளம் கண்டறிந்திட முடியும். மிடுக்கு அலைபேசியின் தொடுதிரைக்குள் மூழ்கி, சிறிய சலனப் படங்களில் தன்னிருப்பை இழந்து, நுகர்பொருள் பண்பாடு கட்டமைத்துள்ள வாழ்க்கைப் பரப்பில் அடையாளங்களைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றவர்களுக்குக் கோணங்கியின் புனைகதைகள் தேவைதானா? என்ற கேள்விக்கு என்னிடம் விடை இல்லை. யோசிக்கும்வேளையில் தமிழ் அடையாளமும் தமிழிலக்கியமும்கூட தேவைப்படாதவர்களுக்கு அறம் என்ற சொல் தேவை இல்லைதான்.

மாந்திரிக யதார்த்தக் கதைசொல்லல், தொடர்ச்சியறு கதைசொல்லல், தொன்மங்கள் தோய்ந்த கதைசொல்லல் போன்ற தொழில் நுட்பம் சார்ந்து கோணங்கியின் கதைகளை அணுகி, மதிப்பிட வாய்ப்புள்ளது. அதேவேளையில் வாசிப்பில் கதைப் பிரதி தருகின்ற இன்பத்தை உணர்ந்து மகிழ்ந்திடவும் வாய்ப்புள்ளது. பொதுவாக மரபான மனம் கதையில் தொடக்கம், உச்சம், வீழ்ச்சி என்ற சூத்திரத்தில் அனுபவத்தை முன்வைத்த நம்பிக்கைக்கு எதிராக அத்துவான வெளியில் தன்னிலையைத் தேடியலைகின்ற கதையாடலைக் கோணங்கியின் எழுத்துகள்மூலம் அறிந்திட முடியும். கடந்த காலத்தில் நாளும் தோன்றி விட்டில்பூச்சிகளென மடிந்த லட்சக் கணக்கான கதைகள் முடிவில் எங்குப் போய்ச் சேர்ந்தன என்ற கேள்வி தோன்றுகின்றது. மனிதர்கள் இறந்த பின்னர் உயிர்கள், சொர்க்கத்தில் இருக்கிற கடவுளிடம் போய்ச் சேர்வதுபோல மடிந்த கதைகளுக்கான இளைப்பாறுதல் இடம் விண்வெளியில் எங்கோ இருக்கிறது என்று நம்புவதைத்தவிர வேறு வழியில்லை.

கதைகள் வாசிப்பில் அழைத்துச் செல்கின்ற உலகத்திற்கு எதிராகத்தான் கோணங்கி புனைவுகளில் சித்திரிக்க விழைந்துள்ளாரா? யோசிக்க வேண்டியுள்ளது. கோணங்கி எழுதியுள்ள புனைகதைகளில் இருந்து வகைமாதிரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள் பற்றிய திறனாய்வாக இக்கட்டுரை விரிந்துள்ளது. ஒட்டுமொத்தக் கதைகளை விமர்சிப்பதைவிட எனக்குப் பிடித்த கதைகளில் பொதிந்துள்ள வாழ்வியலின் பன்முக அம்சங்களைக் கண்டறிந்திடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் இளம் வாசகர் கோணங்கி என்ற சொல் நவீனத் தமிழ் இலக்கியவெளியில் உருவாக்கியுள்ள அடையாளத்தை அறிய முடியும். அந்த வழியில் பயணிக்கிற ஒவ்வொருவரும் புனைகதை வாசிப்பில் அவரவர்க்கான பிரதிகளை உருவாக்கிட 'தோது' உள்ளது.

கோணங்கியின் தொடக்ககால எழுத்துகள் மண் சார்ந்து விரிந்துள்ளன. அவை, கரிசல் பூமியில் வாழ்கின்ற மனிதர்களின் மனவோட்டங்களுக்குள் நுழைந்து கதை கந்தலாகிப்போன வாழ்க்கையை வாழ்ந்திடுமாறு நிர்பந்திக்கப்பட்டுள்ள எளிய மனிதர்களின் அவலத்தையும் துக்கத்தையும் பதிவாக்கியுள்ளன. கு. அழகிரிசாமி, கி. ராஜநாராயணன் போன்ற எழுத்தாளர்கள் சித்திரித்துள்ள கரிசல் மண் பூமியில் இருந்து எழுதத் தொடங்கிய கோணங்கி, "மதினிமார்கள் கதை' முதலாகவே அவருக்கெனத் தனிப்பட்ட மொழியையும் விவரிப்பையும் கையாண்டுள்ளார். கோணங்கி என்ற சொல் மதினிமார்கள் கதை என்ற பெயருடன் தொடர்புடையது. கதைசொல்லியான கோணங்கி, நென்மேனி மேட்டுப்பட்டி கிராமத்திற்குப் பேருந்தில் செல்கின்ற இளைஞனின் பால்ய கால நினைவுகளின் வழியாகக் கரிசல் கிராமத்தினருடனான உறவுகளைப் பதிவாக்கியுள்ளார். சாத்தூர் ரயிலடியில் வெள்ளரிக்காய் விற்கிறவனைச் சேர்த்துக்கொண்டு ஓடி வந்த நம்மூர் ஆவுடத்தங்க மதினியா என்று யோசிக்கிற கதைசொல்லியின் ஏக்கப் பெருமூச்சு வரிகளில் தகிக்கின்றது. சிறுவனாக இருந்த போது அம்மா இறந்தாலும் தெக்குத் தெருவில் வீட்டுக்கு வீடு இவன்மேல் உசுரையும் பாசத்தையும் சுரந்த மதினிமார்களும் செம்புகம் என்று அழைக்கிற சமைஞ்ச குமர்களும் நிரம்பியிருந்தனர். கிராமத்தில் மதினிமார்கள், சாதி வேறுபாடு இல்லாமல் கொழுந்தன்கள், கொழுந்தியாள்கள் மீது காட்டிய ப்ரியம் இன்றைய தலை முறையினர் அறியாதது. தந்தையின் இறப்பினுக்குப் பின்னர் கொள்ளைப் பிரியத்துடன் இருந்த காளியம்மா மதினி, குருவு மதினி, அமராவதி மதினி, சுப்பு மதினி, மாணிக்கம் மதினி போன்ற மதினிமார்களை விட்டுச் சாத்தூரில் ரயிலேறியவனின் காதுகளில் மதினிமார்கள் கூப்பிடுகிற சத்தம் தொடர்ந்து கேட்டது. கடந்த கால நினைவுகளுடன் மீண்டும் நென்மேனிக்குச் சென்றபோது ஆளரவமற்ற தெருக்களில் செம்புகம் தேடிய மதினிமார்கள் காணாமல் போயிருந்தனர். பெரிசுகள் மழை பொழியாமல் வறண்ட கரிசல்பூமியில் வேலிக்கருவையைத் தோண்டிக்கொண்டிருந்தனர். பெண்கள் தீப்பெட்டி ஒட்டப் போனார்கள். குழந்தைகள் தீப்பெட்டி ஆபிஸ் பஸ்ஸில் ஏறினார்கள். தரிசாகிப் போன நிலம்போல கரிசல் காட்டுக்காரர்களும் மாறிய வறண்ட சூழலைக் கடந்த காலத்துடன் ஒப்பிட்டுச் சொல்லப்பட்ட கதை, செம்புகத்தின் கதை மட்டுமல்ல. கதையை வாசிக்கிற பெரும்பாலானோர் தங்களுடைய குழந்தைப் பருவத்திற்கு நினைவுவெளியில் பயணித்து, கண் முன்னர் சிதலமாகிப்போன விழுமியங்களின் வீழ்ச்சியை அறிந்து துயரத்தில் மூழ்கிட வாய்ப்புண்டு.

மதினிமார்கள் கதையைச் சொல்லுவது மட்டும் கோணங்கியின் நோக்கமல்ல. அவர், ஏன் இப்படியெல்லாம் இவ்வளவு

வேகமாக மாறிவிட்டன என்ற கேள்வியை நுணுக்கமாக எழுப்புகிறார். கரிசல் மண்ணின் ஈரம் தோய்ந்த வாழ்க்கை குறுகிய காலத்தில் எதிர்நிலையில் மாறியுள்ள சூழலில் செம்புகம் நகரத்துப் பேரிரைச்சலில் அடையாளமற்று அவசரமாகப் போய்க்கொண்டிருக்கிற காட்சியையும் பார்க்க வேண்டியுள்ளது. கோணங்கிக்குத் தெரியும் இத்தகைய சூழலில் செய்வதற்கு எதுவுமில்லை என்று. வறுமை, பஞ்சம் காரணமாக மனித இருப்பு வாழ்வதற்கேற்றவாறு இல்லாமல் நொறுங்கிடும் சூழலில் இதுவரை சமூகம் கட்டமைத்துள்ள உன்னதமான விஷயங்களைப் பதிவாக்கியுள்ளார், கோணங்கி. நிலம் பற்றிய பெருமிதத்துடன் மண்ணுடன் மல்லுக்கட்டி வாழ்கின்ற கிராமத்துச் சம்சாரிகளின் புலம்பெயர் வாழ்க்கையை விவரிக்கின்றபோது கோணங்கி அவருடைய முன்னத்தி ஏர்களான படைப்பாளர்களில் இருந்து வேறுபட்டுக் கதைக்கின்றார். இவ்வளவு துயரத்துடன் கரிசல் பூமியில் வாழ வேண்டுமா? என்ற கேள்வி, கதையாடலில் பொதிந்துள்ளது. விளிம்பு நிலையினரின் அவலத்தையும் வலியையும் விவரிக்கிற யதார்த்த வகைப்பட்ட கதை சொல்லலில் இருந்து விலகுகின்ற கோணங்கி புனைகதைகளின் வழியாக நடப்பு வாழ்க்கையின் மனித அடையாளத்தைத் தேடுகிறார்.

கழுதையாவாரிகள், கொல்லனின் ஆறு பெண் மக்கள், கைத்தடி கேட்ட நூறு கேள்விகள், மாயாண்டிக் கொத்தனின் ரசமட்டம், கருப்பு ரயில், கோப்பம்மாள் போன்ற கதைகள் கரிசல் காட்டின் அத்துவான வெளியில் திரிகின்ற எளிய மனிதர்களின் இருப்புச் சிதலமானதை நுட்பமாகப் பதிவாக்கியுள்ளன. கதையாடலில் வெளிப்படும் துயரத்தில் மூழ்கி, உச்சுக் கொட்டியவாறு அடுத்தடுத்த வேலைகளில் தன்னை மறந்திடும் போக்கினுக்கு எதிராகக் கொல்லனின் ஆறு பெண் மக்களும் கைத்தடி கேட்ட நூறு கேள்விகளில் சாமி நாயக்கரும் என்ன செய்ய? என்று கேட்கின்ற கேள்விகள், வாசிப்பில் இடைவிடாமல் துரத்துகின்றன. தேவைகள் குறைவு என்ற சூழலில் கிராமத்தினருக்காகக் கொல்லு வேலை செய்து பெற்ற தானியங்கள்மூலம் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்த கொல்லன் திடீரெனப் பக்க வாத நோய்க்குள்ளான போது அன்றாட வாழ்க்கை நொறுங்கியது. கொல்லனின் மனைவி காளியம்மாளும் ஆறு பெண் குழந்தைகளும் எதுவும் செய்யவியலாமல் தவிக்கின்றனர். தந்தையின் உடல் நலமடைய வேண்டுமெனப் பெரிய பாப்பாவான குருவும் பிற பிள்ளைகளும் கிளியாஞ்சட்டியில் தீபம் ஏற்றி, காளியிடம் ஆண்டு முழுவதும் வேண்டுகின்றனர். காளி விக்கிரம் தீபத்துடன் அழுதது என்று கோணங்கியின் கதையாடல் விரிகின்றது. கோணங்கி கொல்லனின் ஆறு பெண் மக்கள் கதையில் வறுமையை யதார்த்தமாகச் சித்திரிப்பதுடன் எதுவும் நடப்பதற்கான சாத்தியத்தில் காளி சிலையும் அழுதது என்ற விவரித்திருப்பது முக்கியமானது. அமானுட ஆற்றலாலும் எதுவும் செய்யவியலாத கையறு நிலையில் கதை, உறைந்துள்ளது. கதையின் முடிவில் கொல்லனுக்கு ஏன் இப்படி நேர்ந்தது என்ற கேள்வி தொந்தரவு செய்கிறது.

எண்பதுகளின் தொடக்கத்தில் கோவில் பட்டி நகருக்குச் சென்றபோது கோணங்கி, அப்பாஸ், கௌரி சங்கர் போன்ற நண்பர்கள் பள்ளிக்கூடம் அருகில் இருந்த மேட்டுக்கு அழைத்துப் போய் இங்கேதான் பூமத்திய ரேகை போகுது என்று ஓரிடத்தைச் சுட்டிக் காட்டிச் சொன்னபோது அதிர்ச்சியாக இருந்தது. புவியியல் புத்தகத்தில் வாசித்த அந்தப் பூமத்திய ரேகை நிலத்தின் வழியாக ஏதோ ஒருவகையில் எனக்குள் ஊடுருவியது. கைத்தடி கேட்ட நூறு கேள்விகள் கதையின் தொடக்கத்தில் கோணங்கி, நம்ம காடு

களைக் கடந்து போகும் பூமத்திய ரேகை விளிம்புகளில் நம்மூர் சமுசாரி இன்னும் மேழி பிடித்து உழுது கொண்டிருக்கிறான். பூமத்திய ரேகைக் காடுகளில் வகை வகையான மண் வாசிகள். யதார்த்தமான கரிசல் காட்டு சம்சாரியை முன்வைத்து நூறு கேள்விகளைக் கேட்கின்ற கோணங்கி பூமத்திய ரேகையைப் பற்றிக் கதைப்பது தற்செயலானது அல்ல. கோணங்கி என்ற சொல்லுக்குள் கரிசல் நிலவெளியில் தாவரங்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள் போன்ற சீவராசிகள் பல்லாண்டுகளாகத் ததும்பி வழிகின்றனர். வெயில் ஏறஏற வாட்டம் கொடுத்திடும். எங்கும் கருகல் வாடை. காடு கருகுவது வாயில்லாச் சீவன்களுக்கெல்லாம் வருத்தம். பச்சைக் காஞ்சு வருது. சீவராசிகள் கண்ணுகளுக்குக் காடெங்கும் உயிர் வாதையாய் இருக்கு. நிலத்துடன் வாழ்கின்ற சீவராசிகள் படுகின்ற பாடுகளைப் பற்றி வாசிக்கும்போது 'நீரின்றி அமையாது உலகம்" என்ற குறள் வரி நினைவுக்கு வருகின்றது. பத்து ஏக்கர் புஞ்சை கைவிட்டுப் போனபின்னர் சாவன்னா என்ற சாமிநாயக்கர் சமுசாரித்தனத்தில் கூடுனை என்றாலும் என்ன செய்ய முடியும்? கலப்பைகள் மூச்சுத் திணறும், கிர்ர்ர் முர்ர்ர்ரென்ற அவல ஒலிகள் என்ற ஒற்றை வரியில் சமுசாரித்தனத்தின் நடப்பைக் கோட்டோவியம் போல கோணங்கி வரைந்துள்ளார். சாமிநாயக்கர்மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்தபோது நீதிமன்றத்தில் அவர், சப்தி வந்தா அர்ணாக்கயித்த அத்து நாண்டுக்கிடுவான் சம்சாரி என்று வேளாண்மையை முன்வைத்துக் கேட்ட கேள்விகள் கோவில்பட்டி தெட்சிணாமூர்த்தி தெரு வரை தொடர்கின்றன; காற்றில் மிதக்கின்றன. ரயிலில் அடிபட்டுத் தண்டவாளத்தில் உடல் சிதறிக் கிடக்கின்ற சாமி நாயக்கரின் அவல வாழ்க்கையின் ஊடாகக் கோணங்கி வாசிப்பில் உருவாக்கியுள்ள கேள்விகள் முக்கியமானவை. கரிசல் மண்ணில் விவசாயி படுகின்ற துயரத்தைக் கைத்தடி கேட்ட கேள்விகளாக உருமாற்றி, கோணங்கி எழுதியுள்ள கதையாடல், இன்றைய கார்ப்பரேட்டுகளின் அரசியல் சூழலிலும் முடிவற்ற கேள்விகளை எழுப்புகின்றது.

கிராமத்தில் வண்ணார் சாதியைச் சார்ந்த அய்யன், அவருடைய மகன் ராசப்பன், கழுதைகள் பற்றிய 'கழுதையாவாரிகள்' கதை, காலந்தோறும் பொதி சுமக்கிற வாழ்க்கை நிர்பந்தத்தை விவரித்துள்ளது. ராசப்பனின் கல்விச் செலவுக்காக விற்கப்பட்ட கழுதைகள் கோவில்பட்டி சாலையில் மண் மூட்டைகளைத் தூக்கிக் கொண்டு வேகாத வெய்யிலில் நடக்கின்றன. ராசப்பன் அஞ்சல் பெட்டிகளில் இருந்து தபால்களை மெயில் பையில் சேகரித்துத் தூக்கிக்கொண்டு அஞ்சல் நிலையம் நோக்கி உச்சி வெய்யிலில் நடக்கிறான். கோணங்கி, அழுக்குப் பொதியைச் சுமக்கிற கழுதைகள் கிராமத்தில் இருந்து நகரத்திற்கு வந்தாலும் விடிவு இல்லை என்று நகைமுரணாகக் கதைத்திருப்பது மனிதனுக்கும் பொருந்துகிறது. விடிவு தேடி நகரத்திற்குப் போனாலும் விடுவிப்பு இல்லை என்று Nostalagia வுடன் கதைக்கிற கோணங்கி எதிர்காலத்தில் பிதிரா, த, நீர்வளரி, ஹா-ரீ-தா நீ-லி- தா போன்ற நாவல்களை எழுதுவார் என்று யாராவது அன்றைக்குச் சொல்லியிருந்தால் விநோத ஜந்துவைப்போலக் கருதப்பட்டிருப்பார். சட்டைகளை உரித்துப் போட்டவாறு தொடர்ந்திடும் புனைவு மொழிப் பயணத்தில் கோணங்கி சொற்களின் பின்னர் இடைவிடாமல் அலைந்து கொண்டிருக்கிறார்.

கோணங்கியின் தொடக்ககாலக் கதைகள் பெரிதும் நிலம் சார்ந்தும் இழப்பின் துக்கத்துடனும் இருப்பினைக் குறித்த ஆழமான உரையாடலை முன்வைத்தன. கோணங்கியின் மொழி ஸ்தீரி, அலாதி, விருட்சம், ஜீவாலை போன்ற சம்ஸ்கிருதச் சொற்களுக்குள் சிக்கியிருந்தாலும்

கடந்தவந்த காலத்தைச் செறிவான மொழியில் விவரித்திருந்த கதையாடல் வாசிப்பில் பலருக்கும் ஈர்ப்பை ஏற்படுத்தியது. கோணங்கி என்றால் மதினிமார் கதைகள் தொகுப்புதான் என்று கதைக்கிறவர்கள், ஒரு காலத்தில் உறைந்திருக்கின்றனர். வெறுமனே கதைகளுக்கு முக்கியத்துவம் தந்து எழுதுகின்ற பெரும்பாலான எழுத்தாளர்கள், ஒரு காலகட்டத்தில் நகலெடுப்பவர்களாக மாறித் தேங்கிப் போகின்றனர். புனைவெழுத்தாளரின் வளர்ச்சி முடிவற்றது. காத்திரமான படைப்பாளி தான் முன்னர் எழுதிய கதையாடலையும் கதைசொல்லல் முறையையும் உள்வாங்கிக்கொண்டு புதிய தளங்களில் நுழைகின்றார். ஏற்கனவே கைவரப்பெற்ற கதைசொல்லலில் இருந்து விலகி, சோதனை முறையில் கதைப்பது பெரும்பாலான கதாசிரியர்களைப் பொறுத்தவரையில் 'ரிஸ்க்.' ஆனால், கோணங்கி எந்தவொரு வடிவத்திலும் சிக்கிக்கொள்ளாமல் அடுத்தடுத்த தளங்களில் புதிய முறையில் புனைவெழுத்தை எழுதத் தொடங்குகிறார். அவருடைய புதிய வகைப்பட்ட புனைவுகள் புரியவில்லை என்ற கடுமையான விமர்சனத் திற்குள்ளானாலும் தனக்கான மொழியில் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கிறார்.

கோணங்கியின் பன்முகக் கதை சொல்லலில் மதுரைக்கு வந்த ஒப்பனைக் காரன், தனுஷ்கோடி, சலூன் நாற்காலியில் சுழன்றபடி, நகுலன் இறந்துவிட்ட பின்னும் ஒலிநாடா ஓடிக்கொண்டிருக்கிறது போன்ற கதைகள், தனிமனிதனின் மனவோட்டமாகக் கட்டற்று விரிந்துள்ளன. ஏற்கனவே கரிசல் வெளியில் புழங்கிய சொற்களில் இருந்து விலகிய கோணங்கி, சித்தன் போக்குப் போலக் கதைக்கத் தொடங்கியது முழுக்கப் புனைவுகளாக வெளிப்பட்டுள்ளது. மனதின் இடுக்குகளில் முடிவற்றுக் கொப்பளிக்கின்ற எண்ணங்களைத் தொகுத்து, வரையறைக்குட்படுத்தி புதிய வகைப்பட்ட மொழியில் விவரிப்பதில் கோணங்கியின் பிற்காலப் புனைவுகள், புதிய பேச்சுகளை உருவாக்கியுள்ளன.

1985 ஆம் ஆண்டு திருவனந்தபுரத்தில் பணியாற்றியபோது அதிகாலை வேளையில் திடீரென அறைக்கு வந்த கோணங்கியைப் பார்த்தவுடன் உற்சாகம். மூன்று நாட்கள் தங்கியிருந்ததாக நினைவு. நகுலனைப் பார்க்கப் போகலாமா? என்றவுடன் சரி என்று கிளம்பினார். 'நினைவுப் பாதை' நாவல் தொடங்கி, கதைகளின் வழியாகச் சிறுபத்திரிகை உலகில் ஏற்கனவே உருவாகியிருந்த நகுலன் பற்றிய பித்துக்குளி பிம்பம் தவறானது என்று கௌடியார் கிழக்குப் போகிற வழியில் சொல்லிக் கொண்டு வந்தேன். கோல்ப் லிங்ஸ் சாலையில் செடிகொடிகள் அடர்ந்திருந்து சோர்வுடன் காட்சியளித்த நகுலனின் வீடு செவ்வியல் தன்மையுடையது. நகுலனுடன் கதைக்கத் தொடங்கிய கோணங்கி, வேறு மனிதனாக உருமாறியிருந்தார். அன்றிரவு முழுக்க 'ஹனி பி' பானத்துடன் எங்கள் உரையாடல் தொடர்ந்தது. பொழுது விடிந்தவுடன் கிளம்பியபோது நகுலனின் கூர்மையான பார்வை எங்களைத் துரத்தி வந்தது. அன்றிலிருந்து நகுலன் மீதும் நகுலனின் எழுத்து மீதும் பேரன்பு கொண்டிருக்கின்ற கோணங்கி எழுதிய 'நகுலன் இறந்துவிட்ட பின்னும் ஒலிநாடா ஓடிக் கொண்டிருக்கிறது' கதை, செவ்வியலானது. நகுலனின் புனைவு எழுத்துகளும் தனக்குள்ளாகவே தன்னைத் தேடிக்கொண்டிருக்கின்ற நகுலனின் விநோதமான மனநிலையும், ஹனி பி பிராந்திக் குடிக்குப் பின்னர் விழிப்புடன் வெளிப்படுகின்ற பேச்சும், பகடியான மொழியும், அன்பு தோய்ந்த பார்வையும் என்று சீனியர் எழுத்தாளரான நகுலன் இப்பவும் எனக்குள் உறைந்திருக்கிறார். எல்லாம் துல்லியமாக இருக்கிறது என்ற யதார்த்த அணுகுமுறையைக் கேள்விக்குள்ளாக்கிய

நகுலனுக்குள் இயல்பாகப் பொதிந்திருந்த அனுபூதி நிலையினால் ஈர்க்கப்பட்டுக் கோணங்கி எழுதியுள்ள புனைவு, ஒருபோதும் நகுலன் இறக்கவில்லை, அவருடைய இருப்பு இன்றும் இருக்கிறது என்று உரத்துச் சொல்கின்றது. நகுலன் என்ற மனிதன் என்பதைவிடப் புனைவெழுத்துகள்மூலம் நகுலன் கெளடியார் கிழக்கில் கோல்ப் லிங்ஸ் சாலையிலுள்ள மரங்கள் அடர்ந்த வீட்டு வரண்டாவில் சூரல் நாற்காலியில் அமர்ந்து, ஓலைப்பக்கோடாவை மறுத்துச்சிணுங்கிடும் பூனையுடன் சம்சய வாதத்தில் ஈடுபட்டுள்ளார் என்று நம்புவது ஒருவகையில் எளிதானது. அந்தவகையில் கோணங்கி புனைவு மொழியின் வழியாக நகுலனை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறார்.

'மதுரைக்கு வந்த ஒப்பனைக்காரன்' புனைகதை, வரலாற்றின் பக்கங்களில் இருந்து மதுரை என்ற தொன்மையான நகரத்தை மீட்டுருவாக்கியுள்ளது. நாடக நடிகர்கள், ஒப்பனையாளன், வாத்தியக் கருவிகள், ஒப்பனைப் பொருட்கள், திரைச்சீலைகள், உடைகள், லாந்தர் விளக்குகள் என்று முன்னர் நிகழ்த்தப்பட்ட நாடகங்கள் பற்றிய விவரணைகள், கதையாடலில் விரிந்துள்ளன. என்ன ஆச்சு நாடக ஒப்பனைக்காரனுக்கு என்ற கேள்வி தோன்றுகின்றது. மதுரை நகரத் தெருக்களில் திரிகின்ற ஒப்பனைக்காரன் ஏல விளக்கின் ஒளியில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க புராதனப் பொருட்களைக் கூவி ஏலம் விடுகிறான். கிழவன் ஒரு வகையில் அதிசய வணிகன். டவுண் ஹால் ரோட்டில் நடக்கிற வணிகனின் முதுகிலுள்ள சுமையில் ஏராளமான ரகசியங்கள் பொதிந்துள்ளன. மன்னரான அரிமர்த்தனபாண்டியன் பரிசாக அளித்த முத்து மாலை, கோவலன் கொண்டு வந்த சிலம்பு, பூழித்தேவன் வாள் ஒவ்வொரு பொருளுக்குப் பின்னர் ஒரு வரலாறு கதையாகப் பொதிந்துள்ளது. மதுரை என்ற சொல் கோணங்கிக்குள் உருவாக்கிய வரலாற்றுப் பிரதிகளை மையமிட்டு விரிந்துள்ள கதையில் கதை என்று எதுவுமில்லை. கோணங்கியின் சாகசமான சொற்கள், தந்திரமாக வரலாற்றுக்குள் இழுத்துச் சென்று மூழ்கடிக்கின்றன.

'சலூன் நாற்காலியில் சுழன்றபடி' கதை, அபத்தமும் இருண்மையும் கலந்து சுழலும் புதிர் வட்டப் பாதையில் விரிந்துள்ளது. யதார்த்தக் கதையாடலில் இருந்து விலகிய கோணங்கி, புதிய மொழியில் கதைத் திருப்பதன் வெளிப்பாடுதான் சலூன் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறவராக மாறியுள்ளார். சலூன் என்ற அலங்கார நிலையத்தில் உடைந்து சிதறுகின்ற கண்ணாடிச் சிதறல்கள் காரணமாக முடி ஒப்பானையாளனான மாயக்கிழவன் செய்த கண்கட்டு வித்தையில் யார் தலையோ கதை சொல்லியின் தலைக்குப் பதிலியாக வந்து சேர்ந்தது. கண்ணாடிக்குள் நுழைந்திடும்போது வரலாற்றுக்குள் பயணிக்கிற மனநிலை. நிலவறையில் இருந்து வெளிப்பட்ட கிழவனின் கைகளில் பல தலைகள். அவற்றுக்கான உடல்கள், குண்டுகள் துளைத்த எலும்புக்கூடுகளாக இருந்தன. கொரில்லாப் போராளிகளின் எலும்புகளை முத்தமிட்டவள், கல்லால் அடித்துக் கொல்லப்படுகிறாள். நகரத்து முச்சந்தியில் நிறுத்தப்பட்ட தேசத் தலைவர்களின் எலும்புக் கூடுகள் மைக் முன்னர் சொற் பொழிவாற்றுகின்றன. அதியற்புதப் புனைவாகச் சலூன் நாற்காலியில் உட்கார்ந்திருந்த கதைசொல்லியின் உடலைவிட்டுப் பிரிந்த தலை கானகத்தில் மறைந்துவிட்டது. சலூன், கண்ணாடி, சுழல் நாற்காலி போன்றவற்றை முன்வைத்துக் கோணங்கியின் ஃபேண்டஸி வகைப்பட்ட கதைசொல்லல் பாசிசம், அதிகாரம், வன்முறை போன்றவற்றை விமர்சித்துள்ளது. எதுவும் நடப்பதற்கான சாத்தியப்பாடுகளை அறிந்தவர்கள் அமர்ந்துள்ள சலூன் நாற்காலிகள் சுழன்றபடி

இருப்பதில் வியப்பில்லை. சொற்களுக்குள் பொதிந்திருக்கிற கதைகளைத் தேடிக் கண்டறிய வேண்டியது வாசகரின் வேலை என்பதுதான் கதைசொல்லி கோணங்கி சொல்ல வருவதா?

கோணங்கி எழுதியுள்ள பட்டுப்பூச்சிகள் உறங்கும் மூன்றாம் ஜாமம், பாதரஸ ஓநாய்களின் தனிமை, உப்புக் கத்தியில் உறையும் சிறுத்தை, நத்தைக் கூடெனும் கேலக்ஸி போன்ற கதைகள், மறுகதையாக்கம் என்ற புதிய வகைக்குள் அடங்குகின்றன. சலூன் நாற்காலியில் சுழன்றபடி வெளியெங்கும் திரிந்த கோணங்கி, ஒரு கட்டத்தில் மொழியின் அதிகபட்ச சாத்தியங்களுடன் விரிவான கதைப் பரப்பில் நுழைந்து கதைக்கின்றார். இது வரை கதை என்று எழுதப்பட்ட கதை மொழியில் இருந்து விலகி, நடந்து முடிந்த நிகழ்வுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களைப் புனைகின்ற கோணங்கி, புதிய தடத்தில் பயணித்திட முயலுகிறார். அவருடைய கதைக்குள் கொட்டிக் குவித்துள்ள சொற்கள் வாசிப்பில் வாசக மறுப்புப் பிரதியாக உருமாறினாலும் நம்பிக்கையுடன் தொடர்ந்து எழுதுகிறார். பாழி, பிதிரா போன்ற பெயர்களில் சொற்களஞ்சியங்களைக் குவித்து எழுதியுள்ள நாவல்களுக்கு மூலம் நத்தைக் கூடெனும் கேலக்ஸி போன்ற புனைவெழுத்துகளில் இருந்து தொடங்கியுள்ளது.

பட்டுப்பூச்சி உறங்குகின்ற மூன்றாம் ஜாமம் கதை, அதியற்புதப் புனைவில் குழந்தையை முன்வைத்துச் சொல்லப் பட்டுள்ளது. பெற்றோர் இல்லாமல் வளர்கின்ற ஜாங்கோவின் பாக்கெட்டில் இருக்கிற நூல்கண்டைக் கேட்டு வேற்றுக் கிரகப் பறவைகள் பறந்து வருகின்றன. கறுப்புப் பெட்டியில் ஒளிந்துகொள்கின்ற ஜாங்கோ, புளூடோ நாயிடம் பெட்டியாக மாறிப் பேசுகிறான். இறந்த மீனின் வாய் வழியாக ஊர்ந்து வந்த எறும்புகள் ஜாங்கோவிடம் சொல்ல வேண்டியதைச் சொல்கின்றன. மூன்றாம் ஜாமத்தில் ஜாங்கோ இளவரசியைத் தீண்ட முடியாமல் சுவர் வலுவாக இருந்தபோது அவனுடைய அம்மாவை நினைத்து அழுகிறவேளையில் மீன்கள் வந்து தேறுதல் சொல்கின்றன. குழந்தைகளின் அற்புதமான உலகைப் பறக்கின்ற சிறுவன், உயிர்பெற்ற பொம்மைகள் என்ற கோணங்கியின் கதையாடலுக்குள் நுழைந்தால், கண்ணெதிராக விரிந்திடும் மாயக் காட்சிகள் தென்படுகின்றன. கதவின் சாவித் துளையின் வழியாக எட்டிப் பார்த்தஜாங்கோ, அந்த வீட்டுக்குழந்தைகள் விட்டுச் சென்ற பொம்மைகளைப் பார்க்கிறான். ஜாங்கோவைப் பார்த்த பொம்மைகள் தலையை அசைத்தன; தேம்பித்தேம்பி அழுதன. என்னுடன் வாரியா என்று ஜாங்கோ அழைத்தபோது அவை மாட்டோம் போ என்றன. நடப்பியல் கதைகளில் இருந்து வேறு தளத்தில் படைப்புகளை உருவாக்கிட முயன்றது, பட்டுப்பூச்சி உறங்கும் மூன்றாம் ஜாமம் போன்ற கதைகளாக வடிவெடுத்துள்ளன. சொற்களின் வழியாகப் ஃபேண்டஸி எழுத்துவகையை உருவாக்கிட முயன்றுள்ள கோணங்கியைப் பொறுத்தவரையில் குழந்தைப் பருவம் என்பது பேண்டஸிதான்.

இனக்குழுவினர்களின் வாழ்க்கை என்பது இன்னொரு இனக்குழுவினருடன் மோதல், சண்டை, கைகலப்பு, பிரச்சினை போன்றவற்றை உள்ளடக்கியதாகும். ஐந்திணை நிலப் பாகுபாட்டில் திணைக்குடிகளாக வாழ்ந்தவர்களின் முதல், கரு, உரிப்பொருட்கள் சார்ந்த வாழ்க்கையை முன்னிலைப்படுத்திடும் பாதரஸ ஓநாய்களின் தனிமை கதை, தமிழர் வரலாற்றை மீட்டுருவாக்கிட முயன்றுள்ளது. இனக்குழு வாழ்க்கையில் நம்பிக்கைகள், சடங்குகள், தொன்மங்கள் போன்றவை முக்கிய இடம் வகிக்கின்றன. புறத்தில் ஆநிரை கவர்தலுடன் வழிப்பறியைக்

குலத்தொழிலாகக் கொண்ட மறவர்களின் வாழ்க்கையில் குருதி தோய்ந்துள்ளது. ஈச நாட்டுக் கருப்பர்களும் ஆறலைக் கள்வர்களும் சுறா மீன் முள், திருக்கை வாலோடு மோதுகின்றனர். காக்கைக் குறவர், செம்பியர், முதுகுடியர் அரசாண்ட பூமியில் பீரங்கிகளுடன் நுழைகின்றன வெள்ளைக் காரர்களின் இரும்புத் தொப்பிகள். எங்கும் கூட்டக் கொலைகள். கருப்புத் தோல் புத்தகப் பலகையின் முன் மண்டியிட்ட இனக்குழுவினர் முன்னர் மத போதகர்கள். பாதரஸ ஓநாய்கள் என்ற பிம்பம் மொழியை முன்வைத்த மந்திரம் அழிந்த நிலையைக் குறிக்கிறது தமிழர் வரலாற்றைத் தொன்மங்களும் இனக்குழுவினர்களின் மந்திரங்களும் கலந்த கதையாக உருமாற்றி, மாந்திரிகப் புனைவுகளைக் கட்டமைத்துள்ள கோணங்கியின் எழுத்து அரசியல் பிரதியாகும். இனக்குழு வரலாற்றை மாந்திரிகமாக மாற்றிடும் கதைப் பிரதியின் தேவை, கலைப் படைப்பு என்ற அளவில் சுருங்கியுள்ளது.

'நத்தைக் கூடெனும் கேலக்ஸி' கதை பூமியில் மனித இருப்பைக் கேள்விக்கு உள்ளாகியுள்ளது. மொசார்ட் என்ற இசை மேதையை முன்வைத்துப் புனைவைக் கட்டமைத்துள்ள கோணங்கி, நத்தைக் கூட்டில் இருந்து வெளியேறிய மனிதனின் உணர் கொம்புகள் தொடங்கிய மொழி விளையாட்டுத் தொடர்கின்றது. எல்லாவற்றையும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்கின்ற தர்க்கம் சிதிலமாகிட பித்து மனநிலையுடன் விரிந்திடும் கதையாடலின் கதைத் தலைப்பு கவனத்திற்குரியது. கேலக்ஸியை நத்தைக்கூடு என்று உருவகிக்கின்ற கோணங்கியின் புனைவு வியப்பை ஏற்படுத்துகின்றது. யோசிக்கும் வேளையில் கணக்கற்ற விண்மீன்கள், கோள்கள், வாயுக்கள், தூசித்துகள்கள் ஈர்ப்பு விசையினால் இணைந்திருக்கிற பெரிய விண்வெளி மண்டலம்தான் கேலக்ஸி எனப்படுகிறது. வானியல் விஷயம் இன்னும் இருக்கிறது. நாம் வாழ்கின்ற பூமி, சூரியக் குடும்பம் ஆகியன பால்வெளி என்ற கேலக்ஸியில் இருக்கின்றன. ஒரு கேலக்ஸியில் கோடிக்கணக்கில் இருந்து லட்சக்கோடி விண்மீன்கள் இருக்க வாய்ப்புண்டு. இப்படியான கேலக்ஸிகள் பிரபஞ்சத்தில் பல்லாயிரம் கோடிகள் உள்ளன. ஒளி, வெற்றிடத்தில் ஒரு விநாடிக்கு 3,00,000 கி.மீ. பயணிக்கிறது. இரவில் நாம் பார்க்கின்ற விண்மீன்களின் ஒளி அங்கிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் புறப்பட்டிருக்க வாய்ப்புண்டு. வானத்தைப் பார்ப்பது ஒருவகையில் கடந்த காலத்தைப் பார்ப்பதற்குச் சமம். அறிவியலாளர் ஸ்டீபன் ஹாங்கிங் பிரபஞ்சத்தை விளக்கிடும் போது விண்வெளியில் கடவுள் என்று யாரும் இருக்க வாய்ப்பில்லை என்று சொல்லியது நினைவுக்கு வருகின்றது. கேலக்ஸி என்ற சொல் கோணங்கிக்குள் உருவாக்கிய புனைவுகள், முடிவற்று விரிந்துள்ளதைக் கதையாக்கியுள்ளார். மரபான கதை சொல்லலில் இருந்து முற்றிலும் மாறுபட்டுக் கேலக்ஸி போன்ற சொற்கள்மூலம் கோணங்கி உருவாக்கிய புனைவு பற்றிய சொல்லாடல், வாசிப்பில் புதிய தேடல்களை நோக்கிய என்னுடைய பயணத்தைத் துரிதப்படுத்தியுள்ளது. விரிவான கதையை வாசிப்பதைவிட கேலக்ஸி, நத்தைக்கூடு போன்ற சொற்களின் பின்னர் திரிவதற்கான முகாந்திரமும் கதைப் பிரதிக்குள் பொதிந்திருப்பது, விநோதம்தான்.

வெகுமக்கள் ஊடகங்கள் உருவாக்குகிற பொதுப்புத்தியில் இருந்து முற்றிலும் விலகிப் புனைவுவெளியைக் கட்டமைக்கிற கோணங்கிக்குத் தன்னுடைய இருப்புப் பற்றிய துல்லியமான புரிதல் உண்டு. ஊடகங்கள் உருவாக்குகின்ற அரசியலுக்கு மாற்றாகச் சமுக, அரசியல், பண்பாடு சார்ந்து கண்டறிந்த கருத்துகளையும் கண்டு பிடிப்புகளையும் படைப்பு களாக்குகின்ற கோணங்கியின் படைப்பூக்கம், உலகமயமாக்கல்

காலகட்டத்தில் காத்திரமான அரசியல் வெளிப்பாடு. கதைகளும் சம்பவங்களும் வரலாறுகளும் கதைமாந்தர்களும் என்று கோணங்கியின் புனைவுகள் விரிந்தாலும் தர்க்கமற்ற படைப்பாக்கம், வாசகர்களை மொழிவெளியில் மிதக்க வைக்கிறது. பொதுவாக எல்லாக் கலைகளும் ஏதோ ஒருவகையில் வாசகர்கள்/பார்வையாளர்களைக் கவர்ந்து ஒருவிதமான போதைக்குள்ளாக்கிடும் வசியத்தைச் செய்கின்றன. எனவேதான் மொழியினால் உருவான கலைப் படைப்பைப் பற்றி நினைத்தாலே மனதில் மகிழ்ச்சி பொங்குகிறது. சொற்களுக்குப் பின்னர் பயணித்து நினைவுவெளியில் உருவாகிடும் காட்சிகள் ஒருவகையில் கொண்டாட்டமாக மாறுகின்றன. விநோதமான கதையாடல் என்றாலும் கோணங்கியின் கைவண்ணத்தில் உயிர்த்தெழுந்திடும் காட்சிகளும் சம்பவங்களும் சீவராசிகளும் சித்திரிக்கிற மாந்திரிக உலகு, சுவராசியமளிக்கிறது. சொற்களை வைத்து மயக்குகின்ற கோணங்கி, ஒருவகையில் வசியக்காரன்தான்.

கரிசல் நிலவெளிப் பின்புலத்தில் எழுதத் தொடங்கிய கோணங்கியின் பிற்காலக் கதைகளும் புனைவுகளும் தொடர்ச்சியறு நிலையில் மௌனம் சாதிக்கின்றன. எனவேதான் கதையை வாசித்து முடித்தவுடன் அவ்வளவுதான் என்று கதையில் இருந்து வெளியேறிட இயலாமல் மொழிக்குள் சிக்கிடும் வாசகன் தவிக்க நேரிடுகிறது. யதார்த்தக் கதைகளில் புனைவு முதல் நிலையிலும் மொழி இரண்டாம் நிலையிலும் செயல்படுகின்றன. கோணங்கியின் படைப்பாக்கத்தில் மொழி முதன்மையாகவும் புனைகதை சொற்களுக்குள் புதைந்து இரண்டாமிடமும் பெறுகின்றன. இது வரை சொற்களினால் கட்டமைக்கப்பட்ட வரையறைகளைப் புறந்தள்ளிவிட்டுத் தனக்கெனப் புதிய கதையாடலை உருவாக்கி, ஒருநிலையில் தன்னுடைய எழுத்தையே மறுதலித்துப் புதிதாகப் புனைகின்ற கோணங்கிக்கு நிகராகச் சொல்லிட தமிழில் யாருமில்லை. மரபான கதைசொல்லலில் தொடங்கி, காலப்போக்கில் சொற்களினால் உருவேற்றப்பட்ட புனைவுகளைப் படைத்திட்ட கோணங்கி என்ற பெயர், தமிழ்ப் புனைவிலக்கிய வரலாற்றில் என்றும் தனித்த ஆளுமையாக விளங்கும்.

சான்றாதாரம்

1. கோணங்கி. சலூன் நாற்காலியில் சுழன்றபடி. புத்தாநத்தம்: அடையாளம் பதிப்பகம், 2015.